***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT***
***Mannargudi***
***CC.No. 179/2019 – P.W. 7 (LW11)***

| | |
|---|---|
| *Name* | ராமச்சந்திரன்<br>தனியார் மருத்துவமனை |
| *Father/Husband's Name* | |
| *Village* | |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | *45* |

**எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 26.03.2026.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் தற்போது சொந்தமாக தனியார் மருத்துவமனை வைத்துள்ளேன்.

கடந்த 09.12.2018 ம் தேதியன்று 11.15 மணிக்கு நான் மன்னார்குடி அரசு தலைமை மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியில் இருந்தபோது சுமார் 45 வயது மதிக்கதக்க செந்தில்வேலன் என்பவரது உடலை மன்னார்குடி நகர காவல் நிலைய ஆய்வாளர் அவர்களின் வேண்டுகோளின் படி பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தினேன். நான் 11.40 மணியளவில் பிரேத பரிசோதனையை தொடங்கினேன். அவரது உடல் முழுவதும் விறைப்பு தன்மை இருந்தது. அவரது உடலில் இருந்த வெளிப்புற காயங்கள்

1. வயிற்றில் மேல்பகுதி, தலைபகுதி, கண் புருவம் ஆகியவற்றில் 1cmX3cm அளவிற்கு சிராய்ப்பு காயங்கள் இருந்தது. வேறு வெளிப்புறகாயஙகள் இல்லை.

உட்புற பகுதி காயங்கள்

1. இருபுறமும் நிறைய விலா எலும்புகள் குறிப்பாக 7,8,9 விலா எலும்புகள் நொருங்கி இருந்தன. நுரையீரலை சுற்றி இரத்த கசிவு இருந்தது. இரண்டு பக்க நுரையீரலும்

கிழிந்து காணப்பட்டது. கல்லீரல் கிழிந்து காணப்பட்டது. இதயம் இரத்தம் கன்றி காணப்பட்டது. வயிற்றில் பாதியளவு செரிமானம் அடைந்த உணவு பொருட்கள் இருந்தது. நாவடி எலும்பு சாதாரணமாக இருந்தது. சீறுநீரகம் இரத்தம் கன்றி காணப்பட்டது. மற்ற அனைத்து உறுப்புகளும் சாதாரணமாக இருந்தது. உள்ளுறுப்புகள் பதம்செய்யப்படவில்லை. பிரேத பரிசோதனையை 01.00 மணிக்கு முடித்தேன். இறப்பிற்கான காரணம் உடலின் முக்கிய உறுப்புகளான இதயம், நுரையீரல், கல்லீரல் பாதிப்படைந்ததால் அவர் இறந்திருக்கிறார் என்று கருத்துரை வழங்கி பிரேத பரிசோதனை அறிக்கை வழங்கினேன். **மேற்படி பிரேத பரிசோதனை அறிக்கை அசா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

Sd/--J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi.